# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 03.08.2018

## இந்திய நிகழ்வுகள்

- போர்த்திறன் சார்ந்த வர்த்தக அங்கீகாரம் **(Strategic Trade Authorization 1 – STA-1)**
  - அமெரிக்கா இந்தியாவினை போர்த்திறன் சார்ந்த வர்த்தக அங்கீகாரம் **( STAa-1)** பெற்ற நாடாக அறிவித்துள்ளது.
  - இதன் மூலம் மேம்பட்ட மற்றும் அதிநவீன தொழில்நுட்ப தயாரிப்புகளை அமெரிக்காவிடமிருந்து இந்தியா வாங்க முடியும்.
  - இத்தகைய அந்தஸ்து இந்தியாவினை அமெரிக்காவின் நேச மற்றும் பங்குதார நாடுகளான **NATO ( North Atlantic Treaty Organisation )** உடன் சமநிலைக்குக் கொண்டு வரும்.
  - தற்போது STA-I பட்டியலில் 36 நாடுகள் உள்ளன.
  - இந்த பட்டியலில் இடம் பெற்ற முதல் தெற்காசிய நாடு இந்தியா ஆகும்.




- **மேகாலயா பால் மிஷன்**
  - பால் உற்பத்தியை மேம்படுத்துவதன் மூலம் 2022 ஆம் ஆண்டளவில் விவசாயி வருவாயை இரு மடங்காக உயர்த்துவதற்கான மைய இலக்கை அடைவதற்கு மேகாலயா

பால் உற்பத்தி திட்டம் உதவும் என்ற வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சர் ராதா மோகன் சிங் தெரிவித்தார்.



- எதிரியின் ஏவுகணையை வானிலேயே இடைமறித்து அழிக்கும் திறன் கொண்ட அதிநவீன ஏவுகணை **ஒடிசா மாநிலம் அப்துல் கலாம்** தீவு பகுதியில் நேற்று வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது. **(DRDO)**



**நியமனங்கள்**

- ஏர் இந்தியா புதிய இயக்குநர்களாக தொழிலதிபர் **குமார் மங்களம் பிர்லா** மற்றும் **ஒய்.சி.தேவேஸ்வர்** நியமிக்கப்பட்டுள்ளனர்.



- ஆந்திராவில் மாநிலத்தில் **முதல்வர்-யுவ நேஸ்தம் (Mukhyamantri Yuva Nestam)** திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
    - இந்த திட்டதின் நோக்கம் 22 முதல் 35 வயது வரையிலான வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.




**முக்கிய தினங்கள்**

- உலக தாய்ப்பால் வாரம் - ஆகஸ்ட் 1 ம் தேதி முதல் 7 வரை உலக தாய்ப்பால் வாரம் கொண்டாடப்படுகிறது.
    - இதன் கருபொருள்: **தாய்ப்பால் ஊட்டுதல் வாழ்க்கையின் அடித்தளம். (Breastfeeding : Foundation of Life.)**




- பிங்கல வெங்கையா **(Pingali Venkayya)** தேசிய கொடியை வடிவமைத்தவர் பிறந்த தினம் 2.08.2018.
- இந்திய தேசிய கொடி **22 ஜுலை 1947** அன்று அங்கிகரிக்கப்பட்டது.

We Shine Academy ™




- தொழில் தொடர்பு துறை அமைச்சகம் e-Aksharayan என்னும் செயலியை உருவாக்கியுள்ளது.
    - இதில் தமிழ் வங்காளம் மலையாளம் இந்தி கன்னட மற்றும் அசாமி ஆகிய மொழிகளில் Scan ஸ்கேன் செய்யும் வசதியை உடைய மென்பொருளை உருவாக்கியுள்ளது.




**உலக நிகழ்வுகள்**

- பாகிஸ்தான் தலைமை நீதிபதியான (Tahira Safdar) நீதிபதி தஹீரா சப்தர் - ஐ பலூசிஸ்தான் (Balochistan) உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமித்துள்ளார்.
    - இதன் மூலம் பாகிஸ்தான் உயர்நீதிமன்றத்திற்கு தலைமை நீதிபதியாக ஒரு பெண்ணை நியமித்திருப்பது இதுவே முதன் முறையாகும்.

